<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
**<u>O.S. No. 197/2024</u>**

வா.சா.1 தேதி.21.01.2026.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அரவிந்த் | | |
| த/பெ. | குமார் | வயது | 45 |
| தொழில் | | கிராமம் | சென்னை. |
| தாலுக்கா | | | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு **முதல் விசாரணை**:-

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது. எனது தரப்பு ஆவணங்களாக 28.04.1980 தேதியிட்ட தாவா சொத்துக்களை அம்புஜம் அம்மாள் கிரயம் பெற்றதற்கான கிரய பத்திரம் அசல் **வா.சா.ஆ.1** ஆகவும், 13.09.1984 தேதியிட்ட அம்புஜம் அம்மாள் எழுதி வைத்த உயில் பத்திரம் அசல் **வா.சா.ஆ.2** ஆகவும், 07.01.2003 தேதியிட்ட அம்புஜம் அம்மாளின் இறப்பு சான்றிதழ் நகல் **வா.சா.ஆ.3** ஆகவும், 08.10.1997 தேதியிட்ட குமார் இறப்பு சான்றிதழ் நகல் **வா.சா.ஆ.4** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

தாவா சொத்துக்கள் அம்புஜம் அம்மாள் அவர்களால் 28.04.1980ல் கிரயம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அம்புஜம் அம்மாள் எனது தந்தை வழி பாட்டி ஆவார். இந்த வழக்கின் 1ம் வாதி எனது தாயார்.1ம் பிரதிவாதி எனது சகோதரி ஆவார். 2ம் பிரதிவாதி எனது அப்பாவின் தம்பி ஆவார். எனது பாட்டி 13.09.1984ல் ஒரு உயில் பத்திரம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த உயில் பத்திரத்தில் கண்டவாறு நாங்கள் பிரித்துக்கொள்ள எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். எனது சித்தப்பாவிற்கும் எனது அப்பாவிற்கும் உயில்

பத்திரத்தின் படி சொத்துக்கள் கிடைக்க எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான்.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.